**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.282/2023**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் நாள் வியாழன் கிழமை எ.ம.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஃபெட்ரிக்ஸ் | த/பெ.: | ஆனந்தராயன் |
| கிராமம்: | தஞ்சாவூர் | தாலுக்கா: | தஞ்சாவூர் |
| மதம்: | கிறிஸ்துவர் | தொழில்: | உதவி மேலாளர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி |
| வயது: | 32 | முகவரி: | தஞ்சாவூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 28.08.2025

**முதல் விசாரணை:**

நான் இந்த மனுவில் 4வது எதிர்மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிருபன வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

விபத்தில் இறந்த ஜெயப்பிரகாஷ் ஓட்டிச்சென்ற TN 50 P 6791 என்ற வாகனம் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஜெயப்பிரகாஷின் மனைவி பின் இருக்கையில் அமர்ந்து சென்றுள்ளார் என்றால் முதல் தகவல் அறிக்கையில் அதுபோன்று குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் ஜெயப்பிரகாஷ் ஓட்டிச் சென்ற

இருசக்கர வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளதால் நாங்களும் நஷ்ட ஈடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

விபத்தில் இறந்த ஜெயப்பிரகாஷ் ஓட்டிய வாகனம் எங்கள் நிறுவனத்தில் தான் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்த ஜெயப்பிரகாஷிற்கு விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் ஜெயப்பிரகாஷ் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. ஜெயப்பிரகாஷ் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் நாங்கள் தான் நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு காரணம் 2ம் எதிர்மனுதாரர் இல்லை என்று சொன்னால் அவர் தான் விபத்திற்கு காரணம். அவர் மேல் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரரை திருத்துறைப்பூண்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் இந்த விபத்திற்கு அவர் பொறுப்பல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.